# மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கை தீர்ப்பாயம், அவிநாசி
## அவிநாசி சார்பு நீதிமன்றம்,
## முன்னிலை : திரு.C.செந்தில்குமார், பி.காம்., பி.எல்.,
## சார்பு நீதிபதி, அவிநாசி

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 – ம் நாள் வியாழக்கிழமை

**M.C.O.P.No.48/2017**

**in**

**(CNR.No.TNTI16-000-218-2017)**

K.கற்பகம் ... மனுதாரர்

//எதிர்//

1. S.P.ராமசாமி
2. K.S.சின்னச்சாமி **(இறப்பு)**
3. தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கோபிசெட்டிபாளையம்
4. கௌரி
5. C.அனுபிரபா
6. C.சந்தோஷ் .. எதிர்மனுதாரர்கள்

**(Amended as per order in IA.No.212/2017 dated 16.02.2017)**

| | | |
|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி | கற்பகம், வயது 36, த/பெ.கிருஷ்ணன், வசிப்பிடம் கதவு எண்.9/56, செல்லாண்டியம்மன் கோவில் வீதி, அவினாசி 641 654. அவினாசி கிராமம், அவினாசி தாலுாக்கா, திருப்பூர் மாவட்டம். |
| (b) | எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | 1. S.P.ராமசாமி, த/பெ.R.பழனிச்சாமி, வசிப்பிடம் கதவு எண்.2/88, A.சுள்ளிபாளையம், சாவக்காட்டு பாளையம் அஞ்சல், அவினாசி தாலுாக்கா. |

| | | |
|---|---|---|
| | | 2. K.S.சின்னச்சாமி(இறப்பு)<br>3. தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 59, ராஜா வீதி, கோபிசெட்டிபாளையம்.<br>4. கௌரி, க/பெ.K.S.சின்னச்சாமி, வசிப்பிடம் வேலவன் ஆட்டோ சர்வீஸ், கதவு எண்.236, நம்பியூர் அஞ்சல், மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.<br>5.C.அனுபிரபா, க/பெ.K.S.சின்னசாமி, வசிப்பிடம் வேலவன் ஆட்டோ சர்வீஸ், கதவு எண்.236, நம்பியூர் அஞ்சல், மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.<br>6.C.சந்தோஷ், வயது 18, த/பெ.K.S.சின்னச்சாமி, வசிப்பிடம் வேலவன் ஆட்டோ சர்வீஸ், கதவு எண்.236, நம்பியூர் அஞ்சல், மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம் |
| (c) | பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி | தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 59, ராஜா வீதி, கோபிசெட்டிபாளையம். |
| (d) | மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்ததக்க எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், 59, ராஜா வீதி, கோபிசெட்டிபாளையம். |
| (e) | இழப்பீடு கோரிக்கை மனு | 13.02.2012 |

| | | |
|---|---|---|
| | தாக்கல் செய்த தேதி | |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | 02.04.2026 |
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை விபரம் | **ரூ.3,74,807/-** |
| (f) | வட்டி விகிதம் | 7.5% |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | 13.02.2012 |
| (h) | செலவுத்தொகை விபரம் | நீதிமன்ற கட்டணம் ரூ 3,121.00<br>முத்திரை கட்டணம் ரூ. 02.00<br>வக்காலத்து ரூ. 05.00<br>வழக்கறிஞர் கட்டணம ரூ. 10,496.00<br>----------<br>மொத்தம் ரூ. 13,624.00<br>---------- |
| (i) | உத்தரவின்படி இழப்பீட்டுத் தொகை வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.3,74,000/-ஐ 3-ம் எதிர்மனுதாரர் செலுத்தப்பட வேண்டும். மனுதாரர் இழப்பீடாக பெற்றுக் கொள்ள வேண்டியது. எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை முழுவதையும் உடனடியாக எடுத்துக் கொள்ளலாம் என்று மனுதாரரின் இம்மனு |

| | | |
|---|---|---|
| | | அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| (j) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | பொருந்தத்தக்கதல்ல |
| (k) | இழப்பீட்டுத் தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | இழப்பீட்டுத் தொகை முழுவதையும் இந்நீதிமன்றத்திற்கான இந்தியன் பேங்க் கணக்கு எண்.7761848987 IFSC No.IDI000A157, Account No. V00820 என்ற கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (l) | இழப்பீட்டுத் தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக் கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் | 3ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் இத்தீர்பாயத்தில் உரிய மனு செய்வதன் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம். |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருமையருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | இல்லை |
| (n) | உத்தரவு பிறப்பிக்கட்டட | ரூ.3,119/- |

| | | |
|---|---|---|
| | தேதியிலிருந்து10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | |
| (o) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | இல்லை |

இம்மனுவானது திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் 19.07.2012–ம் தேதியன்று **MCOP.No.280/2012** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னிட்டு இந்நீதிமன்றத்திற்கு மாற்றலாகி 20.02.2017–ம் தேதியன்று **MCOP.No.48/2017** ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இரு தரப்பு விசாரணை முடிவுற்று கடந்த 05.03.2026–ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு..A.ஆறுமுகம்** அவர்கள் ஆஜராகியும், 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திருமதி.M.மல்லிகா** அவர்கள் ஆஜராகியும், 1,4,5,6 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரருக்கு கடந்த 21.07.2011–ம் தேதியில் ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.10,00,000/– வழங்கக் கோரி மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு–166 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:–

மனுதாரர் கற்பகம் கடந்த 21.07.2011–ம் தேதியன்று காலை சுமார் 9.00 மணியளவில் அவிநாசி பழைய பஸ் நிலையத்தில் இருந்து கோயம்புத்துார் செல்வதற்காக நின்று கொண்டிருந்தபோது அப்போது திருப்பூரில் இருந்து கோவை செல்லும் TN 36 M 3208 என்ற பதிவு எண்ணுள்ள V.A.S தனியார் பேருந்து வந்து நின்றது. மனுதாரர் கோயம்புத்துார் செல்வதற்காக பேருந்தின் முன் படிக்கட்டில் ஏறியபோது தனியார் பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர், நடத்துனர் விசில் அடிப்பதற்கு முன்பே பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இயக்கியதால் பேருந்தில் இருந்து மனுதாரர் விழுந்து விபத்தை ஏற்படுத்தினார். விபத்தில் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிவும், இரண்டு கைகளிலும் இரத்தகாயங்கள் ஏற்பட்டு, உடனே அருகில் இருந்தவர்கள் கோவை பெத்தேல் மருத்துவமனையில் மருத்துமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 21.07.2011–ம் தேதியிலிருந்து சிகிச்சை எடுக்கப்பட்டு 31.07.2011–ம் தேதியில மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் சண்முகம் என்பவர் அவிநாசி காவல்நிலையத்தில் ஆஜராகி 1–ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்து போலீசார் புகாரை பெற்று அவினாசி காவல்நிலைய குற்ற எண்.1971/2011 இதச பிரிவுகள் 279, 337–ன் பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு காரணம் TN 36 M 3208 என்ற தனியார் பேருந்து வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையும் தான் காரணம் ஆகும். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், இரண்டு கைகளிலும் இரத்த

காயங்கள் ஏற்பட்டு, அவர் கோவை பெத்தேல் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அவருக்கு மரபு வழி சிகிச்சை அளிக்கப்பட்டு, 31.07.2011–ம் தேதியில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மனுதாரர் விபத்து சமயத்தில் அவிநாசி மெடிக்கல் எனும் நிறுவனத்தில் வேலை செய்து மாதம் ரூ.7,000/– சம்பாதித்து வந்துள்ளார். மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு மனுதாரர் அவரது பணிகளை கூட செய்யாமல் தன்னால் நிற்கவோ, நடக்கவோ, வண்டி வாகனங்கள் ஓட்டவோ முடியாது என்றும், தலையில் பலத்த அடிபட்டு காயம் ஏற்பட்டதால் கைகளையும், கால்களையும் மடக்க முடிவதில்லை. வலது முழங்காலுக்கு கீழே தொடர்ந்து வலி ஏற்பட்டு கொண்டே இருந்ததால் கோவை பெத்தேல் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி தனியார் பேருந்து வாகனத்தின் ஓட்டுநர். 2–ம் எதிர்மனுதாரர் தனியார் பேருந்தின் உரிமையாளர் மற்றும் 3ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு காரணமான வாகனத்தை காப்பீடு செய்யப்பட்டுள்ள காப்பீட்டு நிறுவனம் ஆகும். எனவே, மனுதாரர் அவருக்கு விபத்தில் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு ரூ,10,00,000/– இழப்பீடாக கோரி 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மீது இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **3<u>ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:–**

இம்மனுவில் கூறப்பட்டுள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர, பிறவற்றை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு சட்டத்தின் படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்கதிகளை இம்மனுதாரரே உரிய ஆவணங்களின் மூலம் நிரூபிக்க

கடமைப்பட்டவர் ஆவார். மனுவின் 23வது பத்தியில் விபத்து குறித்து கூறிய அனைத்து சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். TN 36 M 3208 என்ற பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது பொய். விபத்து நடந்தது மனுதாரரின் கவனக்குறைவால் நடந்தது. விபத்து நடந்த போது பேருந்து ஓட்டுநர் வாகனத்தை ஓட்டுவதற்கு முறையான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தார் என்பதை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். மருந்து பொருட்கள் உதவியாளராக இருந்து மாதம் ரூ.7,000/– சம்பாதித்து வந்ததாக சொல்லும் சங்கதிகளை இம்மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இம்மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவைகளை காண்பிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யாத பட்சத்தில் மனு எடுத்து எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவை மறுக்கப்படுகின்றன. மனுதாரருக்கு ஏதேனும் நிரந்தர ஊனம் ஏற்பட்டிருந்தால் மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 142–ன் கீழ் நிரூபிக்க வேண்டும். மேற்படி சங்கதி இந்த எதிர்மனுதாரால் மறுக்கப்படுகிறது. எனவே 3ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரர் விபத்து குறித்து நிரூபிக்க வேண்டும். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டதாக சொல்வதும் அதற்கு மருத்துவ செலவழித்ததாக சொல்லப்படும் சங்கதிகளும் மறுக்கப்படுகின்றன. மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் நிரந்தரமானவை அல்ல. மனுதாரர் முன்போல் வேலை செய்ய முடியவில்லை என்று சொல்வது இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். அதிக இழப்பீடு பெற வேண்டி பல்வேறு

தலைப்புகளின் கீழ் அதீதமான இழப்பீட்டை கோருகிறார். எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைகள் என்னவெனில்</u>:–**

1. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 36 M 3208 என்ற பதிவு எண் கொண்ட தனியார் பேருந்தின் ஓட்டுநரரான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணமா?

2. மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் அதன் அளவு என்ன?

3. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் அதனை யார் செலுத்த வேண்டும் ?

**5.** மனுதாரர் தரப்பில், மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் பரிசீலனைக்காக குறியீடு செய்யப்பட்டது. ம.சா.1 சாட்சியை தொடர்ந்து சண்முகம் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>பிரச்சனை எண்</u>1:–**

**6.1** இந்த மனுவானது மனுதாரர் கற்பகம் கடந்த 30.10.2016 ம் தேதியன்று காலை சுமார் 9.00 மணியளவில் அவிநாசி பழைய பஸ் நிலையத்தில் இருந்து கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் செல்வதற்காக நின்று கொண்டிருந்தபோது அப்போது திருப்பூரில் இருந்து கோவை செல்லும் V.A.S. TN 36 M 3208 என்ற பதிவு எண்ணுள்ள தனியார்

பேருந்து வந்து நின்றது. மனுதாரர் கோயம்புத்தூர் செல்வதற்காக பேருந்தின் முன் படிக்கட்டில் ஏறியபோது தனியார் பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர், நடத்துனர் விசில் அடிப்பதற்கு முன்பே பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இயக்கியதால் பேருந்தில் இருந்து மனுதாரர் விழுந்து விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தில் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிவும், இரண்டு கைகளிலும் இரத்தகாயங்கள் ஏற்பட்டு, உடனே அருகில் இருந்தவர்கள் கோவை பெத்தேல் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாகவும், பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 21.07.2011–ம் தேதியிலிருந்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு 31.07.2011–ம் தேதியில் மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டதாகவும், அதனால் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட பலத்த காயத்திற்கு இழப்பீடு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** இந்நிலையில், ம.சா.1–ஐ சாட்சியை தொடர்ந்து சண்முகம் என்பவர் ம.சா.2 ஆக மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 தனது சாட்சியத்தில், ம.சா.1 தனது சகோதரி என்றும், வி ஏ எஸ் பஸ் திருப்பூரிலிருந்து கோவை சென்றபோது அந்த பேருந்து பஸ் நிறுத்ததில் நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட தயாராகும் போது வண்டியை வேகமாக எடுத்துவிட்டதால் மனுதாரர் கீழே விழுந்து விட்டார் என்று ம.சா.2 தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் நீதிமன்றம் மூலம் திருப்பூர் மருத்துகுழுமத்திற்கு அனுப்பபட்டு கற்பகம் என்பவருக்கு ஏற்பட்ட காயங்களை ஆய்வு செய்து நிரந்தர ஊனச்சான்று வழங்க கேட்டு வந்த கடிதத்தின் பேரில் மனுதாரர் கற்பகத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அவர் **12.10.2022 மற்றும் 26.10.2022–ம்** தேதிகளில் தங்களுடைய

மருத்துவக்குழு முன்பு ஆஜரான நிலையில் அவருக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு அவருக்கு ஏற்பட்ட Knee mild stiffnene காயங்களில் உடல் இயலாமைக்கு 15% மற்றும் செயல்பாட்டு இயலாமைக்கு 25 % குறிப்பிட்டு ஊனச்சான்றிதழ் வழங்கப்பட்டதாகவும், அந்த ஊனச்சான்றில் Knee mild stiffnene என்று குறிப்பிட்டுள்ளது.

**6.3** இதற்கு மாறான வகையில் மனுதாரரின் இந்த மனுவை ஆட்சேபித்து 3ம் எதிர்மனுதாரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் இந்த மனுவில் கோரியபடி மனுதாரருக்கு எந்தவொரு இழப்பீடும் இந்த 3ம் எதிர்மனுதாரர் நிரூபணம் செலுத்த வேண்டியது இல்லையென்றும், அதனால் மனுதாரரின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவித்து எதிர்வழக்காடி வந்துள்ளார்கள்.

**6.4** இந்நிலையில் மனுதாரர் தரப்பில் தனது வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் மனுதாரர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தனது சாட்சியத்தில், கடந்த 21.07.2011-ம் தேதியன்று காலை சுமார் 9.00 மணியளவில் அவிநாசி பழைய பஸ் நிலையத்தில் இருந்து கோயம்புத்தூர் அவிநாசிலிங்கம் ஹோம்சயின்ஸ் காலேஜீக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தபோது அப்போது திருப்பூரில் இருந்து கோவை செல்லும். V.A.S. TN 36 M 3208 என்ற பதிவு எண்ணுள்ள தனியார் பேருந்து வந்து நின்றது. மனுதாரர் கோயம்புத்தூர் செல்வதற்காக பேருந்தின் முன் படிக்கட்டில் ஏறியபோது தனியார் பேருந்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர், நடத்துனர் விசில் அடிப்பதற்கு முன்பே பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இயக்கி

விபத்தை ஏற்படுத்தியதாகவும், விபத்தில் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிவும், இரண்டு கைகளிலும் இரத்தகாயங்கள் ஏற்பட்டு, உடனே அருகில் இருந்தவர்கள் கோவை பெத்தேல் மருத்துவமனையில் மருத்துமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 21.07.2011–ம் தேதியிலிருந்து சிகிச்சை எடுக்கப்பட்டு 31.07.2011–ம் தேதியில மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டதாகவும், பின்னர் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரர் சண்முகம் என்பவர் அவிநாசி காவல்நிலையத்தில் ஆஜராகி 1–ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்து போலீசார் புகாரை பெற்று அவினாசி காவல் நிலையத்தாரால் குற்ற எண்.1971/2011 பிரிவுகள் 279, 337 இதச படி என்ற வாகனத்தின் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில் TN 36 M 3208 என்ற வாகனத்திற்கு சேதாரம் இல்லை என்று ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளதையும் அறிய முடியகின்றது. இந்த நிலையில், இந்த வழக்கு விபத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற V.A.S. TN 36 M 3208 என்ற நான்கு சக்கர வாகனம் சம்மந்தப்பட்டு வழக்கு விபத்து ஏற்படுத்தி உள்ளது என்பது ஊர்ஜிதமாகிறது.

**6.5** இந்நிலையில், இவ்வழக்கு விபத்தானது V.A.S. TN 36 M 3208 பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என்பதை மனுதாரர் தனது வாய்மாழி சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் நிரூபணம் செய்துள்ளார். மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவான வகையில் முதல் தகவல் அறிக்கை, மருத்துவ

பில்கள், மோட்டார் வாகன ஆய்வறிக்கை உள்ளது. இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த முன் தீர்ப்பான **2014 (4) SCC 511 Meera Devi and another Vs. H.R.T.C and others** என்ற முன் தீர்ப்பில், 1–ம் எதிர்மனுதார் மனுதாரர் மீது கவனக்குறைவு என்ற சங்கதியை முன் வைத்தால் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் எதிர்மனுதாரரே அதனை நிரூபிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அதேபோல், நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **S.Muthu Vs, Managing Director, TNSTC** என்ற முன் தீர்ப்பில் விபத்து இழப்பீடு கோரும் வழக்கில் கவனக்குறைவு என்ற சங்கதியானது, சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட தேவையில்லை என்றும், அதனை பெரும்பான்மை சங்கதிகளின் அடிப்படையிலேயே நிரூபிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் 3ம் எதிர்மனுதாரரின் எதிர்வாத கூற்றை நிரூபணம் செய்யும் வகையில் உரிய சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்துள்ள நிலையிலும், பெரும்பான்மை கோட்பாட்டின் அடிப்படையிலும் V.A.S. TN 36 M 3208 பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் தான் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து நடந்து சென்று கொண்டிருந்த மனுதாரரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி உள்ளார் என்று பிரச்சனை எண்.1–க்கு முடிவு காணப்படுகிறது.

7. <u>பிரச்சனை எண்2</u>:–

**7.1** மனுதாரருக்கு கடந்த 21.07.2011ம் தேதியன்று வாகன விபத்து ஏற்பட்டு அந்த விபத்தில் அவருக்கு அவரது வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், இரண்டு கைகளிலும் இரத்த காயங்கள் ஏற்பட்டு, அதற்காக மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் மனுதாரர் தரப்பில்

சொல்லப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும் விதத்தில் ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3, ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6 வரையிலான சிகிச்சை எடுத்துக்கொண்டது சம்பந்தமான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், இவ்வழக்கு விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் V.A.S. தனியார் பேருந்து வாகன ஒட்டுநரே காரணம் எனவும், பிரச்சனை எண்.1ல் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரான ஓட்டுநரே காரணம் என்பதும், அந்த வாகனத்தின் காப்பீட்டாளர் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரரின் V.A.S பேருந்து வாகன ஓட்டுநர் தான் இந்த வழக்கு விபத்துக்கு காரணம் என்று முடிவு காணப்பட்டுள்ள நிலையில், ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலிருந்து 1–ம் எதிர்மனுதாரரே தீங்கிழைத்த வாகனத்தின் ஓட்டுநர், 2–ம் எதிர்மனுதாரர் தீங்கிழைத்த வாகனத்தின் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தீங்கிழைத்தவர் என்ற நிலையில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆவார். ஆனால், அந்த V.A.S தனியார் பேருந்து வாகனத்தின் வாகன காப்பீட்டாளர் என்ற முறையில் 3ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய வேண்டும். 3ம் எதிர்மனுதாரரிடம் செய்யப்பட்ட காப்பீடு குறித்து இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, 1ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டாளர் என்ற முறையில் 3ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார். எனவே, மனுதாரருக்கு இழப்பீடு தர 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பாளர்கள் ஆவார்கள் என்று பிரச்சனை எண்.2 க்கு தீர்வு காணப்படுகிறது.

8. <u>பிரச்சினை எண்3</u>:–

**8.1** இந்த வழக்கு விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருப்பூர் மருத்துவ குழுமத்தினரால் உடல் இயலாமைக்காக 15% சதவீதமும், செயல்பாட்டு இயலாமை்,ககாக 25% சதவீதமும் குறிப்பிட்டு ஊனச்சான்று கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஊனச் சான்று நீ.ம.சா.ஆ.1 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு நிரந்தர ஊனம் மற்றும் செயல் இழப்பிற்கு அவருக்கு 40% சதவீதத்திற்கு கணக்கிட்டு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென்று வாதிட்டார். இந்த நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 மருத்துவ வெளியேற்ற குறிப்பிலிருந்து மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், இரண்டு கைகளிலும் இரத்தகாயங்களுக்காக 21.07.2011–ம் தேதியில் கோவையிலுள்ள பெத்தேல் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 31.07.2011–ம் தேதி வரையில் சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட ம.சா.ஆ.2 ஆவணத்தில் மனுதாரருக்கு

**<u>DIAGNOSIS:</u>**

Grade II compound fracture tibia Right

3 piece fracture fibula Right.

என்ற காயங்கள் ஏற்பட்டு இருந்ததாகவும், அந்த காயங்களுக்கு மரபு முறையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என்தும் தெரிய வருகிறது.

**8.2.** இந்நிலையில், மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், இரண்டு கைகளிலும் இரத்த காயங்கள் ஏற்பட்ட காயத்திற்கு உடல் இயலாமைக்காக 15% சதவீதமும், செயல்பாட்டு

இயலாமைக்காக 25% சதவீதமும் குறிப்பிட்டு ஊனச்சான்று திருப்பூர் மருத்துவ குழுமத்தினரால் ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1 கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஊனச்சான்று வழங்கிய மருத்துவர்களை சாட்சியாக அழைத்து இவ்வழக்கில் விசரிக்கப்படவில்லை. இந்நிலையில், வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், இரண்டு கைகளிலும் ஏற்பட்ட கொடுங்காயத்தின் தன்மையை பொறுத்து நீ.ம.சா.ஆ.–1ல் உடல் இயலாமைக்காக 15% சதவீதமும், செயல்பாட்டு இயலாமைக்காக 25% சதவீதமும் என்று குறிப்பிட்டு ஊனச்சான்று கொடுக்கப்பட்டுள்ளபோதிலும் இந்நீதிமன்றம் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை பொறுத்து 25% சதவீதத்தையே இந்த தீர்ப்பாயம் கணக்கிற்கு எடுத்து கொண்டு அதன் அடிப்படையில் 1% நிரந்தர ஊனத்திற்கு ரூ.5,000/– என நிர்ணயித்து மனுதாரரின் நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடு 25 x 5,000 = ரூ.**1,25,000/–** என நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் மனுதாரர் தான் அவினாசி மெடிக்கல் நிறுவனத்தில் வேலை செய்து வந்ததாக மனுவில் சொல்லியுள்ள நிலையில், அந்த தொழில் மூலம் மாதம் ரூ.7,000/– மாத வருமானம் வந்தது என்பதை காண்பிக்கும் வகையில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களையும் முன்நிறுத்தவில்லை. எனவே, மனுதாரரின் மருத்துவ வெளியற்ற குறிப்பில் விபத்து நடந்த தேதியில் மனுதாரருக்கு வயது 37 ஆகும். அதனால், மனுதாரரின் தோராய வருமானமாக மாதம் ரூ.7,000/– நிர்ணயிக்கப்படுகிறது. இந்நிலையில், மனுதாரர் 21.07.2011–ம் தேதியில் இருந்து 31.07.2011 தேதி வரை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்கிறார். அவருடைய தோராய வருமானம் ரூ.21,000/– ஆக நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அவர் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் சுமார் 3 மாதங்கள்

வேலைக்கு செல்ல முடியாமல் இருந்திருக்கலாம் என முடிவு செய்து, அவரின் வருமான இழப்பாக 3 x 7,000 = **ரூ.21,000/-** நிர்ணயிக்கப்படுகிறது.

**8.3.** மனுதாரர் தனது மருத்துவ செலவு **ரூ.86,807/-**க்கும் மேல் செலவு ஏற்பட்டதற்காக தெரிவித்து, அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.3, ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6 மருத்துவ பில் ரசீதுகளை ஒப்படைத்துள்ளார். அந்த மருத்துவ பில்களில் கண்ட தொகை ரூ.86,807/- மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது ஆகும். அதேபோல், மனுதாரர் போக்குவரத்து செலவிற்காக தோராயமாக ரூ.25,000/- என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், மனுதாரருக்கு விபத்தில் கொடுங்காயங்கள் ஏற்பட்டு அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மனுதாரருக்கு தனது வலது முழங்காலுக்கு கீழே எலும்பு முறிந்தும், இரண்டு கைகளிலும் கொடுங்காயத்திற்கு மனுதாரரின் வலி மற்றும் வேதனைக்காக ரூ.75,000/-மும், அவருக்கு வசதி வாய்ப்பு குறைவிற்காக ரூ,20,000/- தர தக்கது என தீர்மானிக்கப்படுகிறது. மேலும் அவரது ஊட்டச்சத்து மற்றும் உடனிருந்தோர் செலவு தொகையாக ரூ.20,000/-ம் அவரது ஆடை ஆபரண சேதத்திற்காக ரூ.2,000/-மும் மருத்துவ செலவிற்காக தர தக்கது என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்யப்படுகிறது.

| **வ.எண்** | **இழப்பீட்டிற்கான தலைப்புகள்** | **தொகை விபரம்** |
|---|---|---|
| 1 | நிரந்தர ஊனம் மற்றும் நிரந்தர வருவாய் இழப்பிற்காக **(25% x ரூ.5,000 = ரூ.1,25,000/-)** | ரூ. 1,25,000/- |
| 2 | மருத்துவ செலவிற்காக | ரூ . 86,807/- |
| 3 | போக்குவரத்து செலவிற்காக | ரூ. 25,000/- |

| | | | |
|---|---|---|---|
| 4 | ஊட்டச்சத்து, மற்றும் உடனிருந்தோர் செலவுத் தொகையாக | ரூ. | 20,000/– |
| 5 | வலி மற்றும் வேதனைக்காக | ரூ. | 75,000/– |
| 6 | வசதி இழப்பிற்காக | ரூ. | 20,000/– |
| 7 | ஆடை ஆபரண சேதத்திற்காக | ரூ. | 2,000/– |
| 8 | வருமான இழப்பிற்கு (3 x 7,000 = 21,000) | ரூ. | 21,000/– |
| | **மொத்தம்** | **ரூ.** | **3,74,807/–** |

**முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு இழப்பீட்டுத் 3–ம் எதிர்மனுதாரர் ரூ.3,74,807/–ஐ செலுத்தப்பட வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரையில் ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் வழக்கு செலவுத் தொகையையும் சேர்த்து 2 மாத காலத்திற்குள் INDIAN BANK, A/c.7761848987, IFSC No.IDIB000A157 AVINASHI BRANCH ல் உள்ள இத்தீர்ப்பாயத்தின் MACT வங்கி கணக்கில் எதிர்மனுதாரர் NEFT அல்லது RTGS மூலம் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், மனுதாரர் இழப்பீட்டு தொகையை இத்தீர்ப்பாயத்தில் உரிய மனு செய்வதன் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம் என்றும், மனுதாரர் செலுத்த வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணத்தை 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், மனுதாரரின் வழக்குரைஞர் கட்டணம் ரூ.10,496/–ஐ எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தாளரிடம், நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் 02–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.02 17:37:48 +0530

**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–**

ம.சா.1 – கற்பகம்

ம.சா.2 – சண்முகம்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.ஆ.1** | 21.07.2011 | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| **ம.சா.ஆ.2** | 31.07.2011 | காயச்சான்றிதழ் | அசல் |
| **ம.சா.ஆ.3** | – | மருத்துவ பில்கள் | சான்றிட்ட நகல் |
| **ம.சா.ஆ.4** | | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | கணினி நகல் |
| **ம.சா.ஆ.5** | | மருத்துவ பில்கள் | அசல் |
| **ம.சா.ஆ.6** | – | மருத்துவ பில்கள் | அசல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**:– இல்லை

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.02 17:37:56 +0530

**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

**சீரான/வரைவு உத்தரவு**
**மோ.வா.வி.கோ.தீ.ம.எண்.48/2017**
**நாள். 02.04.2026**